# மன்னர் - திருமலையில் 13 இராணுவத்தினர் பலி

(கொழும்பு)
மன்னார்-திருமலையில் நேற்று முனதினம் இடம்பெற்ற இரு வெவ்வேறு தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டதாக கேர்ணல் முனசிங்க கொழும்பில் தெரிவித்தார்.
(3ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 14 இதழ் 200
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-8-1991


## 45 ஆளும் கட்சி உறுப்பினர் கையெழுத்து

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான மகஜரில் 45 ஆளும் ஐ. தே. கட்சி உறுப்பினர்களும் 80 எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படு
[3-ம் பக்கம் பார்க்க]

## மக்களையும், அரசையும் படையினர் பாதுகாப்பர்

[கொழும்பு]
எத்தகைய நிலைமை தோன்றினாலும் மக்களையும், அரசாங்கத்தையும் முப்படையினரும், பொலிசாரும் பாதுகாப்பார்கள் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.
(3ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பிரேமா

# தென்பகுதியில் அரசியல் கொந்தளிப்பு

# ஜனாதிபதியை நீக்கக் கோரி

# 125 எம்.பிக்கள் போர்க் கொடி!

## லலித், பிரேமச்சந்திர ராஜினமா

(கொழும்பு)

**ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டுமென்று கோரும் மகஜர் ஒன்றை நாடாளுமன்றத்தில் சுமார் 125 எம். பி. க்கள் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.**

இதற்கிடையில் கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும், தொழிற்துறை அமைச்சர் திரு. பிரேமச்சந்திரவும் தமது அமைச்சர் பதவிகளை ராஜினமா செய்துள்ளனர்.

மேற்படி புகார் மனுவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த எம். பிக்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எம். பிக்களும் கையெழுத்திட்டுள்ளனர்

ஜனாதிபதி இழைத்துள்ளதாகச் சொல்லப்படும் முறைகேடான நடவடிக்கைக்காக அரசியலமைப்பின் 38வது பிரிவின்கீழ் ஜனாதிபதிமீது அரசியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சட்டத்தின்கீழ் சபையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் இவ்வாறு எழுத்து மூலமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும் அல்லது சபையின் மொத்த வலுவில் அரைவாசிக்கும் அதிகமானோர் அத்தகைய நோட்டீஸ் ஒன்றில் கையெழுத்திடவேண்டும்.

திரு. பிரேமதாஸா 1988ம்
[3-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சரவை பதவி இழக்கும்

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிராக மனு வழங்கியிருப்போர் குறைந்த பட்சம் அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்தால் ஜனாதிபதியை தவிர அமைச்சரவை முழுவதும் பதவியிழக்கும் சாத்தியமுள்ளது.

எந்தவொருநிலை தோன்றினாலும் நாடளுமன்றில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை பலம் இல்லையென்பது தற்போது தெளிவாகிவிட்டதாக லிபரல் கட்சி தலைவர் திரு. சாணக்க அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் உட்கட்சிப்போராட்டமே
[4-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சரும் கையெழுத்து

[கொழும்பு]
ஜனாதிபதிக்கு எதிரான மனுவில் தனது நெருங்கிய நண்பரும் அமைச்சருமான ஒருவர் கையெழுத்திட்டுள்ளதாகவும் தாம் அவரது கையெழுத்தைப் பார்த்ததாகவும் லிபரல் கட்சித் தலைவர் சாணக்க அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## சில,எதிர்க்கட்சிகள் கையெழுத்திடவில்லை

[கொழும்பு]
ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திடவில்லை இதேவேளை மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மனுவை ஆதரிப்பார்கள் அரசு கவிழும், இன்னும் சில மாதங்களில் இலங்கையில் தொங்கு நாடாளுமன்றம் அமையுமெனவும் கூறப்படுகிறது. [சி]

## ராஜதுரோகி, கொலையாளி

### பிரேமாவுக்கு எதிரான குற்றங்கள்

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாஸா ஒரு ராஜ துரோகி, அரசியல் சட்டத்தை தானுக மீறியவர், கொலையாளி என பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தியே ஜனாதிபதிக்கு எதிராக மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் குறித்து விவாதிக்க பெருமளவு உறுப்பினர்கள்முன்வந்துள்ளது திரு. பிரேமதாஸாவுக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

மேலும் நாடாளுமன்றத்தை கலைத்து புதியதேர்தலுக்கு உத்தரவிட ஜனாதிபதி நினைத்தாலும் அரசியல் சட்டப்படி அது
(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் நீக்கப்படலாம்

[கொழும்பு]
தமக்கு நம்பிக்கையில்லாத அமைச்சர்களை, ஜனாதிபதி
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிரான மகஜரில் கையெழுத்திடவில்லை

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக தாங்கள் மகஜர் எதிலும் கைச்சாத்திடவில்லை என அமைச்சர்களும் ஐ. தே. க. எம். பிக்களும் தம்மிடம் கூறி
[4ம் பக்கம் பார்க்க]

## படைத்தளபதிகள் பிரேமாவுக்கு ஆதரவு

(கொழும்பு)
இலங்கையின் அரசியலமைப்பு தொடர்ந்தும் உறுதியாகப் பின்பற்றப்படுமென முப்படைத் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் உறுதியளித்துள்ளனர்.

தலைநகரில் எழுந்துள்ள அரசியல் குழப்பத்தையடுத்து மேற்படி படைத் தளபதிகள் நாட்டு மக்களுக்கும், அரசாங்கத்துக்கும் இவ்வாறு உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

அரசியல் யாப்பைப் பேணுவதாகவும், ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற முறையிலும், பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையிலும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு சட்
(3ம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸாவுக்கு அமைச்சரவை ஆதரவு

[கொழும்பு]
ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அமைச்சரவை தனது முழு ஆதரவையும் வழங்க உறுதி அளித்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் திரு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மீது குற்றம் சுமத்துவதற்கு அரசியல் யாப்பின் 38-வது பிரிவின் கீழ் சபாநாயகர் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாக தனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

இந்த விடயம் நேற்றுக்காலை
[3-ம் பக்கம் பார்க்க]

## முப்படைகளும் உஷார் நிலையில்

(கொழும்பு)
கொழும்பின் சகல பகுதிகளிலும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது

முப்படைகளும் எந்த நிலைமையையும் சமாளிக்கக்கூடிய விதத்தில் தயாராக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பலபகுதிகளிலும் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கட்சிகள் நிலவரம்

(கொழும்பு)
225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை பாராளுமன்றத்தில் கட்சிகளின் நிலவரம் வருமாறு:

| | |
|---|---|
| ஐ. தே. க. | - 125 |
| ஸ்ரீ. ல. சு. க, | - 67 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - 10 |
| முஸ்லிம் காங்கிரஸ் | - 04 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | - 03 |
| ஐ. சோ. மு. | - 02 |
| சுயேட்சை [மட்டு மாவட்டம்] | - 01 |
| சுயேட்சை வெற்றிடம் | - 12 |
| ஐ. சோ. மு. தேசிய பட்டியல் வெற்றிடம் | - 01 |

# வரி விளம்பரம்

## மணமகள் தேவை

ஜேர்மனியில் நிரந்தரமாக வசிக்கும் கிறீஸ்தவ மணமகனுக்கு 28 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. விளம்பர இல. 1540 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் (சி-1540)

## திருமண சேவை

வாலிப உள்ளங்களே! பெற்றோரே ஏக்கமா? கிரகதோஷமா? விதவையா? பொருள் இருந்தும் இல்லாமலும் கலங்கும் கன்னிகளே! காளைகளே! டாக்டர், எஞ்சினியர் மேல்நாடு உத்தியோகத்தர் வியாபாரி, தொழிலாளி வரை தேவையா? தேவை சொர்க்கத்தில் இறைவனால் மண்ணில் மனிதரால் நிச்சயிக்கப்படும். நித்திய கல்யாணி ஏஜண்ட், ஆசிரியர் கலாசாலை வீதி, இருபாலை, கோப்பாய். [சி-5228]

## வேலைவாய்ப்பு

இலகு வழியில் வேலைவாய்ப்புடன் வெளிநாடு செல்ல விரும்பும் இரு பெண்கள் தேவை. நித்திய கல்யாணி ஆசிரியர் கலாசாலை வீதி, இருபாலை, கோப்பாய். சி-5227

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை லிங்கராசா பெரிய போரதீவு என்பவருடைய அடையாள அட்டை மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கராசா இந்திரா ஜுவலரீஸ் கன்னாதிட்டி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-5226)

## வாங்க விற்கப்படும்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், பேப்பர், உர, சீமெந்து உறை, சஞ்சிகைகள், வெற்றுத் தகரங்கள் போத்தல் வகைகள் வாங்கப்படும் விற்கப்படும். முகாமையாளர் V. R. பழைய புத்தகசாலை 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-5143)

## விற்பனையாகிறது

22-8-91 செவ்வாய் மாற்றம். சோபிதா, 363, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் நூல் ஆசிரியர் Prof:- சத்தியதாஸன். (சி-5221)

## விற்பனைக்கு

சிங்கர் தையல் மெசின் (புதியது) ஹெர்குளிஸ் லோட் மாஸ்டர் சைக்கிள் புதிய ரயர் ரியூப்புடன் அலுமேனிய பீலித் தகரம் 25, பனை மரங்கள் 15, 1½-2 இஞ்சி கல்வனைஸ் பைப்3, 6 இஞ்சி பேபி கிரைண்டர் 1 (மிளகாய் அரைப்பது) விற்பனைக்குண்டு. தொடர்பு செல்வராசா கந்தையா தேனீர்க்கடை, பஸ்நிலையம், சாவகச்சேரி. (சி-5212)

## புதிய வகுப்புகள்

Computer - Basic Shorthand & typing Spoken English வகுப்புகள் முறையே 28-8-91, .- -91, 4-9-91 திகதிகளில் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு School of Business Administration, 16, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-5208)

## நிலவே நீ மயங்காதே

''ரமணிச்சந்திரன்'' நாவலொன்றை படித்த மனத் திருப்தியைத் தரும் சமூக நாவல். தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனம்களை இந்நாவலில் சந்தியுங்கள். (சி 5211)

## ஆண்டு - 5

புலமைப் பரிசில், அனுமதிப் பரீட்சைக்கேற்ப ஒவ்வொரு மாதத்தின் 1ம், 3ம் ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் மாதிரி வினாத்தாள்கள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) வெளியிடப்படும். அவற்றினைப் பெற்று விடை எழுதித்தந்தால் இலவசமாக திருத்திக்கொடுக்கப்படும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5213)

## பிறப்பு சான்றிதழ்

(புலோலி)

பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவகத்தில் மிக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே பிறப்புச் சான்றிதழ் பத்திரம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (61)

## மரம் நாட்டு வாரம்

(உடுவில்)

இலங்கையில் தேசிய மரம் நடுகை வாரமாக செப்டெம்பர் மாதம் 7ம் திகதியில் இருந்து 23ம் திகதி வரையான ஒரு வார காலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (109)


## "A" LEVEL CENTRE

### உயர்தராதர கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, 1-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**புலம்**

**ஆரம்பம்: 01 - 09 - 91**

Sun. - 11-15 - 12 - 15
Sat. & Sun. 11-15 - 12 - 15

ஆசிரியர்: Mr. சௌந்தி (Bsc. Hons)

(எ-1541)



## RADIO - T. V. & DECK


புதிய பயிற்சி நெறிக்கான
### வகுப்புக்கள் ஆரம்பம்!
02-09-1991

★ சிறந்த விரிவுரையாளர் குழு
★ பிரத்தியேக செய்முறைப் பயிற்சி

விபரங்கட்கு:
**வடஇலங்கை தொழில்நுட்ப கல்லூரி**
NORTH CEYLON TECHNICAL INSTITUTE;
14, St. Peter's Lane,
HOSPITAL ROAD - JAFFNA.

(ஏ-1539)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**முருகர் சின்னத்துரை**
(ஓய்வு பெற்ற அரசாங்க எழுதுவினைஞர் கல்வித்திணைக்களம்)

தோற்றம்: 13 - 01 - 1926 மறைவு: 21 - 08 - 1989
திதி: 30 - 08 - 1991

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்,
உங்களின் பிரிவால் துயர் கொள்ளும்
மனைவி, மகள், உறவினர்
நண்பர்கள்.

அல்வாய் மேற்கு.
அல்வாய். (சி- 5219)

## 15-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இரத்தினம்பிகை நல்லையா**

தோற்றம்: 12-5-1916 மறைவு: 14-9-1976
திதி: 30-8-1991

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
எம் இதயமெல்லாம் நிறைந்திருக்கும்
அன்புத் தெய்வமே ஆண்டுகள் பதினைந்துபோனாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சங்களில் இருந்து மாறாது:
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்புப் பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

7, கைலாசபிள்ளையார் கோவில்
பின் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி-5229)

## ஈராண்டு நினைவஞ்சலி



செல்வன்
**அருளானந்தம் சுதாகரன்**
(க. பொ. த. உயர்தரம் ஹாட்லிக் கல்லூரி)

உதிப்பு: 08 - 09 - 1969 அழிப்பு: 21 - 08 - 1989
திதி: 30 - 08 - 1991

ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
அன்புச் சுதாவே! பண்பின் பிறப்பிடமே!
ஏழைக் கினியனே! உன் இன்முகம்
இதயமதில் ஒளிக்குதே செல்வமே
உன் நினைவலைகள் மோதிவர
நெஞ்சிழந்து துடிப்பதன்றி வேறுளதோ
எம்மவர்க்கு
ஆன்மா சாந்தியடைய கண்ணீர்
மலரினால் இறைவனைப் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா,
தங்கை, உடன்பிறவா ஞானியண்ணா,
உதயண்ணா, றஜனி அக்கா,
ஆசையம்மா.

திக்கம். (சி- 5141)

# ஜனாதிபதியை பதவிநீக்க வழிசெய்யும் அரசியலமைப்பின் 38வது சரத்து

(1) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 38வது பிரிவின்படி ஜனாதிபதியின் பதவி பின்வரும் சூழ்நிலைகளில் வறிதாதல் வேண்டும்.

(2) அ பாராளுமன்றஉறுப்பினர் எவரும், சபாநாயகருக்கு முகவரியிட்டு அனுப்பும் கடிதத்தின் மூலம், மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாக ஜனாதிபதி அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதுள்ளாரெனச் சார்த்துகின்ற, அல்லது ஜனாதிபதி, பின்வருவனவற்றைப் புரிந்ததற்குக் குற்றவாளியாகவுள்ளாரெனச் சார்த்துகின்ற தீர்மானம் பற்றிய அறிவித்தலொன்றைக் கொடுக்கலாம்:

- ★ அரசியல் அமைப்பினை வேண்டுமென்றே மீறிய குற்றம்
- ★ தேசத் துரோகம் புரிந்த குற்றம்.
- ★ இலஞ்சம் பெற்ற குற்றம்,
- ★ தமது பதவிக்குரிய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தமையை உள்ளடக்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம்.
- ★ ஒழுக்கக் கேட்டை உட்படுத்தும், ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு.

அத்துடன் சுமத்தப்பட்ட குற்றச்சார்த்தல் அல்லது குற்றச் சார்த்தல்கள் பற்றிய முழுவிபரங்களையும் அத்தீர்மானம் தருதல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றத்தினால் அதன் மீது விசாரணை நடாத்தப்படுதல் வேண்டுமெனவும், அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும், கோருதலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தலெதுவும், (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகினாலொழியவும்—

(1) அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினர்க்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருந்தாலொழியவும், அல்லது

(II) பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையிலும் அரைவாசிப் பங்கினர்க்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டிருப்பதுடன் அத்தகைய குற்றச்சார்த்தல் அல்லது குற்றச் சார்த்தல்கள் நீதிமன்றத்தினால் அதன் மீது அல்லது அவற்றின் மீது விசாரணை நடாத்தப்பட்டு அறிக்கை செய்யப்படத் தகவுடையது அல்லது தகவுடையன எனச் சபாநாயகர் திருப்தியடைந்தாலொழியவும்,

சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலோ அல்லது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித் தாளில் இடப்படுதலோ ஆகாது

(இ) அத்தகைய தீர்மானம் உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டு பங்கினர்க்குக் குறையாதவர்கள் அதற்குச் சாதகமாக வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றப்படுமிடத்து அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள குற்றச்சார்த்தல் அல்லது குற்றச் சார்த்தல்கள் விசாரணைக்கும் அறிக்கைக்குமெனச் சபாநாயகரினால் உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) உயர் நீதிமன்றம், முறையானவிசாரணையின்பின் (அத்தகைய விசாரணையின் போது தாமே தோற்றவும் தாமாகவே அல்லது தமது சட்டத்தரணி மூலம் தம் வழக்குரைக்கவும் ஜனாதிபதிக்கு உரிமையிருத்தல் வேண்டும்) அதன் தீர்மானம் பற்றி, (அவற்றிற்கான காரணங்களுடன் சேர்த்து) பாராளுமன்றத்துக்கு அறிக்கை ஒன்றைச் செய்தல் வேண்டும்.

(உ) உயர் நீதிமன்றமானது ஜனாதிபதி உளக்குறைபாடு காரணமாக அல்லது உடற்குறைபாடு காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவாராயிருக்கிறார் என்று, அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய தீர்மானத்தில் அடங்கியுள்ள வேறு குற்றச்சார்த்தல்களுள் எவற்றுக்கும் ஜனாதிபதி குற்றவாளியாக விருக்கிறார் என்று தாம் அபிப்பிராயப்படுவதாகப் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யுமிடத்து பாராளுமன்றம் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டு பங்கினர்க்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம். (153)

## பிரேமதாஸாவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையில் ஆராயப்பட்டது. சகல அமைச்சர்களும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்க உறுதியளித்துள்ளனர். ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். அவர் மக்களுக்கு மாத்திரமே பதில் கூறவேண்டியவர் என்றும் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். [சி]

## படைத் தளபதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கும் ஜனநாயக முறையிலான அரசாங்கத்தை பேணுவதற்கும் சகல ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் சகல படைத்தளபதிகளும் உறுதியளித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (சி)

## மன்னார் - திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் வங்காலை-தள்ளாடி முகாமிடையே சென்ற படையணியின் ஜீப் வண்டி கண்ணிவெடியில் சிக்கியதில் 9 படையினரும் திருமலையில் புலிகளின் கிளேமோர் தாக்குதலில் 4 படையினரும் கொல்லப்பட்டனர். [சி]

## 45 ஆளும் கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதுதொடர்பாக நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடைபெறின் ஐ தே கவைச் சேர்ந்த 50உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு எதிராக வாக்களிப்பார்கள் எனவும் பிரேமதாஸா பதவி இழக்கும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## மக்களையும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் முப்படைத் தளபதிகள் மத்தியில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

நேற்று மாலை அமைச்சர்கள் மற்றும் முப்படைத் தளபதிகளை அவசரமாகச் சந்தித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பேச்சு நடத்தினார்.

## தென்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாராளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 225 இடங்களில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 125 இடங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது

நாட்டின் இனப்பிரச்னை உட்பட பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி தவறிவிட்டார் என்று கூறப்படுவதையொட்டி அவருக்கு எதிராக எம். பி. க்கள் கொண்டுவரும் மிகக் கடுமையான முதலாவது நடவடிக்கை இது என கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 23-4-1913



மறைவு: 31-7-1991

அமரர்

## வீ. எம். கணபதிப்பிள்ளை

[V. M. K. உரிமையாளர்]

தங்கக் குணத்தாலே
தங்கநிலை ஏற்றி வைத்தீர்
எங்கள் குடும்ப
இணைப்பின் பிணைப்பான

ஐயா எமைக் கலங்க
விட்டதேன் எங்கள்
விழிநீர் சொரிகின்றோம்
உமை நினைந்து

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி-5223)

# புலிகள் - அரசு பேச்சுக்கு ஐரோப்பாவில் முயற்சி

[லண்டன்]

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நிபந்தனையற்ற சமாதானப்பேச்சை ஏற்படுத்த ஐரோப்பியநாடுகள் முயற்சித்து வருவதாக லண்டனில் புலிகள் பிரமுகர் திரு அன்ரன் ராஜா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் இந்த சமாதான முயற்சியில் புலிகளும் சேர்ந்து செயற்பட முயலுமென்றும் ஐரோப்பிய முயற்சியை குழப்ப புலிகளுக்கு எதிரான சக்திகள் முயன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை திரு கிட்டு லண்டனிலிருந்து வெளியேறி ஐரோப்பிய நாடொன்றிற்கு சென்றுள்ளதாகவும் அங்கு அவர் தொடர்ந்தும் இருப்பாரென கூற முடியாதென்றும் திரு. அன்ரன் ராஜா கூறினர். [சி]

---

நிதர்சனம் நிறுவனத்தில்
பின்வரும் வெற்றிடங்களுக்கான

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. தகவல் சேகரிப்பாளர்கள்
2. தகவல் அலுவலர்கள்
3. செய்தியாளர்கள்
4. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
5. அறிவிப்பாளர்கள்
6. விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம், திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் 1991 - 09 – 05 இற்கு முன் தொடர்புகொள்க.

## "நிதர்சனம்"

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

குறிப்பு: மேலதிக விபரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஏ 1537)

---

மேற்குறிப்பிட்ட 29-8-91ம் திகதி 1537 இலக்க விளம்பரத்தில் பதவி வெற்றிடம் என்ற சொல் பிரயோகம் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

---

## வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விழுப்புண்பட்டு வைத்திய சிகிச்சை பெற்றுவந்த ரேய் [சொக்கலிங்கம் மதிவதனன், முல்லைத்தீவு] நேற்று அதிகாலை வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

★

ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் முகமது [விநாயகம் ஜெயபரன், அரசர்கேணி பளை] வீரமணமடைந்துள்ளார்.

வீரமரணமடைந்த இரு விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

---

### ஜனாதிபதிக்கு

-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இதுபற்றி பத்திரிகையாளர்கள் பலர் கேட்ட பல கேள்விகளுக்கு அமைச்சர் ரணில் பதில் சொல்ல மறுத்ததும் குறிப்பிடத்தக்கது. [சி]

---

### அமைச்சரவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு எதிராக திசை திரும்புவதாக 'டெய்லி நியூஸ்' பத்திரிகை கூறியுள்ளது. (சி)

---

### அமைச்சர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி நீக்கும் சாத்தியமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து அவர் விரைவில் முடிவு செய்வார் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. [சி]

---

### ராஜத்துரோகி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயலாதகாரியம் என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (சி)

---

## விமான தாக்குதல்

[மணலாறு]

மணலாறு மாவட்டத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இம்மாவட்டத்திலுள்ள கொக்குளாய், நாயாறுப்பகுதிகளில் தொடர்ச்சியாக நேற்று அதிகாலை ஒரு மணியளவிலும் மாலை மூன்று மணியளவிலும் அவ்ரோ, பொம்மர் விமானங்கள் இணைந்து பயங்கர குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இதேவேளை நேற்று முன்தினமும் இப்பகுதியில் பலத்த விமானத்தாக்குதல் நடத்தப்பட்டன.

---

## மரண அறிவித்தல்

### பொன்னையா தன்மாவரதர்

(இளைப்பாறிய அநுராதபுரம் புகையிரத கட்டுப்பாட்டு நிலைய பிரதம கட்டுப்பாட்டு அதிகாரி)

கைதடி வடக்கைச் சேர்ந்த தன்மாவரதர் 27-08-1991 அன்று காலமானர். இவர் காலஞ்சென்ற திரு திருமதி பொன்னையா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (கணக்காளர், லங்கெம் லிமிட்டெட்), பாலகுமாரன் (கணக்காளர், துரைராஜா அசோசியற் பிறைவேற் லிமிட்டெட்), பாலதயாளன் (தொழில் நுட்பவியலாளர், ரூபவாஹினி கூட்டுத்தாபனம்), பாலராஜன் (அமெரிக்கா), சீதாலஷ்சுமி பாலேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பாஞரும், சகுந்தலாதேவி, சுலோஜனு ஆகியோரின் மாமஞரும், சுதர்சன், ஜெனனி ஆகியோரின் பேரனுமாவார்.

தகவல்:- பாலகுமாரன் (மகன்)

''சீதாபதி'',
கைதடி வடக்கு, கைதடி.

(சி-5230)

---

# 45-ம் நாள் நினைவு அஞ்சலி



ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த

## மேஜர் கோபு / ரதீஸ்

[பத்மநாதன் கோபுநாதன்]

ஈழமண்ணில் ஜனனம்: 04 - 04 - 1970

ஈழமண்ணில் வீரமரணம்: 17 - 07 - 1991

ஓ...... வீரனே.........!
நீ மாவீரனுன செய்தி கேட்டு
கணப் பொழுதில் கலங்கி நின்றோம்;
மறுகணமே நிமிர்ந்து கொண்டோம்

உந்தன் ஆயுதந்தான்
கைகள் மாறியது;
உந்தன் சுவடுகளை
நாங்கள் தொடர்ந்திடுவோம்.

உந்தன் வழி காட்டல்
எம்மை வழி நடத்தும்
எதிரிகளின் பாசறைக்கு.

விடுதலை வித்தானவனே!
இடுகின்றோம் ஓர் சபதம்
''நீ தந்த துப்பாக்கி
விடிகின்ற நாள் வரையும்
ஓயாது சட சடக்கும்''
மா வீரனே.........!
எண்ணிப் பார்க்கின்றோம்
நீ புரிந்த சாதனையை;
நீ நடந்த பாதை தனை.
இந்தியப் படைதனுக்கு
அதிரடி கொடுப்பதிலே
இன்பம் கண்டவன் நீ.

உன் பெயரைக் கேட்டாலே
'பரா' படைக்கும் தொடை நடுக்கம்
சமூக விரோதிகட்கும்,
சதிகாரக் கும்பலுக்கும்
தக்க பாடம் புகட்டி நின்ருய்.
சிங்களத்துப் படையதனைச்
செருக் களத்தில் வேரறுக்க
வேண்டியதைச் செய்து நின்ருய்.
ஆனையிறவினில் நீ
கொட்டிவிட்ட செங்குருதி
சிவப்பேற்றும் மண்ணதனை;
இருள் விலகும் விரைவினிலே.

சமரபாகு தேவன் குறிச்சி,
(இலக்கணுவத்தை)
உடுப்பிட்டி.

**கிராம மக்களும், அறிவகம் சனசமூக நிலைய நிர்வாகிகளும், கற்பக விநாயகர் ஆலய நிர்வாகிகளும்.**

[ஏ-1542]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registred as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.